**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1. மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**CNRNO.TNTV07-000660-2013**

**IN**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.384/2013**

**வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 05.12.2013**

**வழக்கு விசாரணை முடிவுற்ற நாள் : 13.03.2026**

| | | |
|---|---|---|
| லெட்சுமி பிரபா,வயது 44/2012<br>க/பெ.கணேசன்,<br>1/3,பட்டக்காரத்தெரு,<br>மன்னார்குடி. | | ................ புகார்தாரர் |
| | **/எதிர்/** | |
| 1.மு.கணேசன்,வயது 50/2012<br>த/பெ.முனியாண்டி,<br>இளம் மின்பொறியாளர்,<br>மின்வாரியம்,வடுவூர்,<br>மன்னார்குடி தாலுக்கா. | | 1 வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப் போய்விட்டது. |
| 2. வீரம்மாள்,வயது 37/2012<br>க/பெ.கணேசன்,<br>மாணிக்கவாசகம் சைக்கிள் ஸ்டேண்ட்,<br>பொன்னாப்பூர் ரோடு,<br>மேல உளூர்,<br>ஒரத்தநாடு தாலுக்கா,<br>தஞ்சை மாவட்டம். | | ......... 2,3,4,5,6,7 எதிரிகள் இவ்வழக்கின் எதிரிகள் |
| 3.சுப்பிரமணியம், வயது 42/2012<br>த/பெ.நடராஜன்,<br>39A.பட்டகாரத்தெரு,<br>மன்னார்குடி. | | |
| 4.யசோதை (எ) மீனா,வயது 38/2012<br>க/பெ.சுப்பிரமணியம், | | |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:09:23 +0530

| | | |
|---|---|---|
| 39A.பட்டகாரத்தெரு,<br>மன்னார்குடி. | | |
| 5.ஆனந்தன்,வயது 38/2012<br>த/பெ.நடராஜன்,<br>39A.பட்டகாரத்தெரு,<br>மன்னார்குடி. | | |
| 6.சுமதி,வயது 30/2012<br>க/பெ.ஆனந்தன்,<br>39A.பட்டகாரத்தெரு,<br>மன்னார்குடி. | | |
| 7.நடராஜன்,வயது 65/2012<br>த/பெ.ராமதாஸ்,<br>39A.பட்டகாரத்தெரு,<br>மன்னார்குடி. | | |

இவ்வழக்கானது கடந்த 05.12.2013 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 13.03.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர்/ புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சுவாமிநாதன்,B.A.,B.L, அவர்கள் ஆஜராகியும் 2,வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மணிகண்டன், B.A.,B.L., மற்றும் 3,4,5,6,7,எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.செல்வராஜ்,B.A.,BL., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (08.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**//தீர்ப்புரை//**

**1.** இவ்வழக்கானது புகார்தாரரால் கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் புகார் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி எதிரிகள் மீது 147,452,342, 294(b),498(A) , 323,325 உ/இ 109 இதச மற்றும் TNPHW ACT ன் கீழ் குற்றம் செய்ததாக எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**<u>புகார்தாரர் தனது புகாரில் : –</u>**

2. முதல் எதிரி கணேசன் புகார்தாரரின் கணவர். இரண்டாம் எதிரி வீரம்மாள் முதல் எதிரியின் இரண்டாம் மனைவி. மூன்றாம் எதிரி, சுப்பிரமணியன் ஐந்தாம் எதிரி ஆனந்தன் புகார்தாரரின் கொழுந்தனார் நான்காம் எதிரி யசோதை (எ)



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:09:35 +0530

மீனா ஆறாம் எதிரி சுமதி ஆகியோர் புகார்தாரருக்கு ஒப்படியாள் ஏழாவது எதிரி நடராஜன் புகார்தாரருக்கு மாமனார் என்றும்,

புகார்தாரருக்கும் ஒன்றாம் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்கிறார்கள் என்றும், கடந்த 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் புகார்தாரர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் தனியாக இருந்தபோது மேற்படி ஏழு எதிரிகளும் புகார்தாரர் வீட்டிற்குள் அத்துமீறி புகுந்து புகார்தாரரை குச்சிக்காரி, தேவடியா என ஒன்றாவது எதிரி கணேசன் திட்டி, கையால் வலது கன்னத்தில் அறைந்தார். வீரம்மாளும் சுமதியும் புகார்தாரரை பிடித்துக்கொள்ள ஆனந்தன் புகார்தாரர் கழுத்தை பிடித்து நெறித்தார் என்றும் சுப்பிரமணியன் கட்டையால் புகார்தாரர் முதுகில் அடித்தார் என்றும், அந்த அடி புகார்தாரரின் வலது தோள்பட்டையில் பட்டது என்றும் அதனால் வலது தோள்பட்டையில் உள்ள எலும்பு முறிந்து விட்டது என்றும் புகார்தாரரின் மாமனார் நடராஜன் புகார்தாரரை காலால் தள்ளி எட்டி உதைத்து வீட்டை விட்டு வெளியே போடி என வெளியே கொண்டு வந்து ரோட்டில் போட்டு அடித்தார் என்றும் , அவருடன் சேர்ந்து கொண்டு வீரம்மாள் யசோதை (எ) மீனா சுமதி ஆகியோர் புகார்தாரரை கையால் வலது கன்னம், இடுப்பு ஆகிய பகுதிகளில் அடித்தார்கள் என்றும், புகார்தாரர் மேற்கண்ட நபர்களால் ஏதேனும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அஞ்சியிருந்தார் என்றும், மறு நாள் 21.05.2011 மதியம் சுமார் 1.30 மணியளவில் மேற்கண்ட நபர்கள் அடித்ததில் வலி தாங்க முடியாததால் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும், புகார்தாரரின் வலது தோள்பட்டை, முதுகு, கழுத்து, வலது காது ஆகிய இடங்களில் தாங்க முடியாத வலியும் சரியாக பேசமுடியாத நிலையிலும் 21.05.2011 முதல் 23.05.2011 வரை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், மன்னார்குடி அரசு மருத்துவமனையினர் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள் என்றும், தஞ்சையில் புகார்தாரருக்கு யாரும் உறவினர்கள் இல்லாததால் மேல் சிகிச்சைக்காக சென்னை K.M.C மருத்துவமனைக்கு சென்றார் என்றும், அங்கு புகார்தாரருக்கு வலது தோள் பட்டையில் எலும்பு முறிவு இருந்ததால் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள் என்றும் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் 24.05.2011 மாலை 6.30 மணிக்கு போய் சேர்ந்தார் என்றும் அங்கு புகார்தாரருக்கு சிகிச்சை செய்தார்கள் என்றும், வலது தோள் பட்டையில் எக்ஸ்ரே எடுத்தார்கள் என்றும், வலது தோள்பட்டையில் கிளாவிக்கல் எலும்பில் முறிவு ஏற்பட்டு உள்ளதாகவும், அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தினார்கள் என்றும், புகார்தாரருக்கு போதுமான வசதி இல்லாததால் அறுவை சிகிச்சை செய்து



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:10:30 +0530

கொள்ளவில்லை என்றும், இன்றும் புகார்தாரருக்கு வலது தோள்பட்டையில் தாங்க முடியாத வலியும் துன்பமும் இருக்கிறது என்றும், மேற்கண்ட நபர்கள் புகார்தாரரை அடித்து தாக்கியது சாட்சிகள் சேரமணி, செந்தில் தியாகராஜன், கார்த்தி ஆகியோருக்கு தெரியும் என்றும், புகார்தாரரிடம் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்தபோது மன்னார்குடி அரசு காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் எஸ்.அசோகன் என்பவர் வந்து புகார் வாக்குமூலம் பெற்றார் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தின் பேரில் மேற்கண்ட எதிரிகள் மீது, மன்னார்குடி நகர காவல் நிலையக்குற்ற எண். 441/2011 –இல் இ.த.ச. பிரிவுகள் 147,448, 294(பி), 342, 323 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து முறையான விசாரணையில்லாமல் சங்கதிகளில் பிழையுடையது என இறுதியறிக்கை தாக்கல் செய்த விவரத்தை கோர்ட்டிலிருந்து நோட்டீஸ் வந்த பிறகு தெரிந்து கொண்டார் என்றும், மேற்படி எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 147,452, 342, 294(பி),498(A) , 323 325 r/w 109 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் தண்டனை பெறவேண்டியவர்கள் என்று கூறி புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**1 வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டது.**

**3.** புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனு மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலனை செய்தும், புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் தரப்பில் லெட்சுமிபிரபா, சேரமணி மற்றும் நஜீமாராணி ஆகிய மூவரும் புகார்தாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் மேற்படி எதிரிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக நகல்கள் வழங்கப்பட்டது. எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147,452, 342, 294(பி),498(A) , 323 325 r/w 109 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளுக்கு படித்து காட்டி குற்றம் பற்றி வினவியபோது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கு விசாரணைக்கு உத்தரவிடவேண்டியும் கோரினார்கள் எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.**புகார்தாரர் தரப்பில் ஏழு நபர்கள் சாட்சிப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் புகார்தாரர் சேரமணி மற்றும் மருத்துவர் தவிர இவ்வழக்கில் வேறு யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட நபரான புகார்தாரர் பட்டியல் சாட்சி 1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:10:46 +0530

சாட்சியாக பட்டியல் சாட்சி 2 சேரமணி ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். புகார்தாரர் தரப்பில் பு.த.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பு.த.சா.ஆ. 1 முதல் பு.த.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சுருக்கம்.**

**பு.த.சா.1 லெட்சுமி பிரபா** தனது சாட்சியத்தில் தான் மன்னார்குடி நகரம் பட்டக்காரத்தெருவில் இலக்கம் 1/சி-யில் வசிக்கிறேன் என்றும், ஆஜர் எதிரி கணேசன் தன்னுடைய கணவர் என்றும், 2 வது எதிரி வீரம்மாள் அவர்களை தனது கணவர் இரண்டாம் தாரமாக திருமணம் செய்துக்கொண்டுள்ளார் என்றும், 3 வது எதிரி சுப்பிரமணியன் தனது கொழுந்தனார் என்றும், 4 வது எதிரி யசோதை (எ) மீனா தனக்கு ஓப்படியார் என்றும், 5 வது எதிரி ஆனந்தன் தனது கொழுந்தனார் என்றும், 6 வது எதிரி சுமதி தனது ஓப்படியார் என்றும், 7 வது எதிரி நடராஜன் தனது மாமனார் என்றும், கடந்த 20.05.2011 ம் தேதி இரவு 10.30 மணியளவில் தான் 1/3 பட்டக்காரத்தெருவில் உள்ள தன் வீட்டில் வசித்து வந்தேன் என்றும், அன்று கணேசன் இரண்டாவதாக திருமணம் செய்துள்ள வீரம்மாள், அவருடைய தம்பி சுப்பிரமணியன், சுப்பிரமணியன் மனைவி யசோதை (எ) மீனா, கணேசனின் தம்பி ஆனந்தன், ஆனந்தனின் மனைவி சுமதி, கணேசனின் அப்பா நடராஜன் ஆகியோர்கள் தனது வீட்டிற்கு வந்து அத்துமீறி தன்னிடம் வம்புக்கு வந்தார்கள் என்றும், அப்பொழுது கணேசன் தேவடியா, குச்சிக்காரி என்று சொல்லி திட்டி தனது வலது கன்னத்தில் கையால் அடித்தார் என்றும், கணேசன் தன் கழுத்தை பிடித்து மேலே தூக்கம் போது தன் கழுத்தில் இருந்த 3 பவுன் தங்கசெயினை அறுத்துவிட்டார் என்றும், அடுத்து வீரம்மாள், சுமதியும் தன்னை இறுக்கி பிடித்துக்கொண்டார்கள் என்றும், ஆனந்தன் தன் கழுத்தை நெறித்தார் என்றும், சுப்பிரமணியன் தன் முதுகில் கட்டையால் அடித்தார் என்றும், அந்த அடி தனது வலது தோள்பட்டையில் விழுந்தது, அதனால் தனது வலது தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், அதன் பின்பு கணேசன் அப்பா நடராஜன் காலால் எட்டி உதைத்து வெளியே போ என்று சொல்லி அடித்து வீட்டிற்கு வெளியே இழுத்துவிட்டார் என்றும், சுமதி, வீரம்மாள், யசோதை (எ) மீனா ஆகியோர்கள் தன் கழுத்து, முதுகில், கன்னத்தில் ஆகிய இடங்களில் அடித்தார்கள் என்றும், தனக்கு வலிதாங்க முடியாததால் அன்று தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், மறுநாள் காலை தான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு நஜிமா ராணி என்ற மருத்துவர் தான் தனக்கு சிகிச்சை அளித்தார் என்றும், 21.05.2011 முதல் 23.05.2011 வரை தான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்தேன் என்றும், தன்னை மேல்சிகிச்சைக்காக 23.05.2011 ம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:10:53 +0530

மருத்துவமனை அனுப்பிவைத்தார்கள் என்றும், ஆனால் தான் தஞ்சாவூரில் தனக்கு உறவினர்கள் யாரும் இல்லை என்பதால் தான் சென்னை கே.எம்.சி, கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன் என்றும், அங்கு தனக்கு மேல்சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி பொது மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், அங்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்ததினால் தனக்கு வலது தோள்பட்டையில் கிளரிக்கேல் போன் உடைந்திருந்து தெரியவந்தது என்றும், அங்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள் என்றும், ஆனால் தன்னிடம் போதிய வசதி இல்லாத காரணத்தினால் தான் 1 வருடம் மாத்திரைகள் சாப்பிட்டு வருவதாக சொல்லி மாத்திரை வாங்கிக் கொண்டு வந்தேன் என்றும், அந்த எலும்பு முறிவினால் தன்னால் கடினமான வேலை செய்ய முடியவில்லை என்றும், இந்த சம்பவம் சேரமணி, செந்தில், தியாகராஜன், கார்த்திக் ஆகியோர்களுக்கு தெரியும் என்றும், தான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபொழுது அங்கு மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் இருந்து வந்த போலீசார் தன்னிடம் அசோகன் காவல் அதிகாரி புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்த புகார்வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தான் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 06.06.2012 ம் தேதியன்று காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததால் தான் இந்நீதிமன்றத்தில் ஒரு புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றும், 24.05.2011 ம் தேதி சென்னை கே.எம்.சி–யில் சிகிச்சையில் சேர்ந்தபொழுது அங்கு காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பிரிவில் காண்பிக்க சொன்னதன் பேரில் அங்கு சிகிச்சை எடுக்க சொன்னதன் பேரில் சென்னை கீழ்பாக்கம் மற்றும் ராஜீவ் அரசுபொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சீட்டுகள் மொத்தம் பக்கம் 8 வரிசை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மீது நடவடிக்கை எடுத்து எதிரிகளுக்கு தண்டனை அளித்தும், தனக்கு ஏற்பட்ட காயம் மற்றும் துன்பத்திற்கான இழப்பீடு தர வேண்டும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**பு.த.சா.2 சேரமணி** தனது சாட்சியத்தில் புகார்தாரர் லெட்சுமி பிரபாவை தெரியும் ஆஜர் எதிரி கணேசனையும் தெரியும் என்றும், அவர் புகார்தாரர் கணவர் ஆவார் என்றும் 2 முதல் 7 வரையிலான வீரம்மாள் சுப்பிரமணியம், யசோதை (எ) மீனா , ஆனந்தன், சுமதி, நடராஜன் ஆகிய எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் , புகார்தாரர் வீடு பட்டக்காரத்தெருவில் உள்ளது என்றும், புகார்தாரர் வசிக்கும் பட்டக்காரத்தெருவில் உள்ள சோழேஸ்வரர் கோவிலில் நிர்வாக அலுவலராக இருந்ததால் அந்த தெருவில் உள்ள அனைவரையும் தனக்கு தெரியும் என்றும், சென்ற 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில்


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:11:02 +0530

வைகாசி விசேசத்திற்காக கோவில் பராமரிப்பு வேலை நடைபெற்று வந்தது அதற்காக தான் பட்டக்காரத்தெருவிற்கு சென்றேன் என்றும் லெட்சுமி பிரபா அவர்கள் வீட்டிற்கு எதிரே தனது அண்ணன் மகன் வீடு உள்ளது என்றும் அங்கு சென்றேன் அவர்கள் வீட்டிற்கு எதிரே பேசிக்கொண்டு இருந்தேன் என்றும் அப்பொழுது லெட்சுமிபிரபா வீட்டில் அலறல் சத்தம் கேட்டது என்றும் தான் ஓடிப்போய் பார்த்தபொழுது 7 நபர்கள் லெட்சுமி பிரபாவை அடித்துக் கொண்டு இருந்தார்கள் என்றும், அவர்கள் 1 கணேசன், 2 வீரம்மாள், 3 சுப்பிரமணியன், 6 யசோதை (எ) மீனா, 7 ஆனந்தன், 8 சுமதி, 9 நடராஜன் அதில் கணேசன் லெட்சுமிபிரபாவினை குச்சிக்காரி, தேவடியா என்று திட்டி கன்னத்தில் அடித்தார் என்றும் வீரம்மாள் ,சுமதியும் லெட்சுமிபிரபாவை பிடித்துக்கொண்டார்கள் என்றும், ஆனந்தன் லெட்சுமிபிரபாவின் கழுத்தை நெறித்தார் என்றும், சுப்பிரமணியன் என்பவர் கம்பால் லெட்சுமிபிரபாவின் வலது தோள்பட்டையில் அடித்தார் என்றும், நடராஜன் காலால் லெட்சுமிபிரபாவினை உதைத்தார் என்றும் வீரம்மாள், சுமதி மீனா ஆகியோர்கள் கம்பால், கையால் லெட்சமிபிரபாவினை அடித்தார்கள் என்றும் தான் மத்திசம் செய்தேன் என்ன பிரச்சனை என்று கேட்டேன் அதற்கு எங்கள் குடும்ப பிரச்சனை என்று எதரிகள் 7 நபர்களும் சொன்னார்கள் என்றும் அதனால் தான் அங்கிருந்து வந்துவிட்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**பு.த.சா.3 நஜீமா ராணி தனது** சாட்சியத்தில் தான் மதுரை கிழக்கு வட்டார மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 21.05.2011ம் தேதியன்று மாவட்ட அரசு மருத்துவமனை மன்னார்குடியில் 24 மணி நேர பணியில் இருந்தபோது திருமதி.லெட்சுமிபிரபா வயது 44 மதிக்கத்தக்க பெண்மணி மகேஷ் என்பவரால் 01.35 p.m மணிக்கு அழைத்து வரப்பெற்றார் என்றும், அவரை தான் பரிசோதித்த போது 20.05.2011ம் தேதியன்று பட்டக்கார தெருவில் இரவு 10.30 மணிக்கு தெரிந்த 7 நபர்கள் கையாலும், கட்டையாலும் அடித்ததாக கூறினார் என்றும், அவரை தான் உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும், 1. கழுத்திலும் முதுகிலும் வலி இருப்பதாக கூறினார், 2. வலது காதில் வலி மற்றும் காது கேட்கவில்லை என்றும், 3.தொண்டையில் வலியும் பேச கஷ்டமாக உள்ளதாகவும், 4.வலது பாதத்தில் வலி இருப்பதாக கூறினார் என்றும், மேற்கண்ட காயங்களுக்காக ENT மருத்துவருடைய கருத்துரைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு Refer செய்து அனுப்பி வைத்தேன் என்றும், நோயாளி அங்கு செல்ல விருப்பமில்லை என்று கூறிவிட்டதால் தானே உள்நோயாளியாக அனுமதித்து 23.05.2011ம் தேதியன்று மறுபடியும் refer செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் மருத்துவமனைக்கு சென்றதற்கான ஆவணங்கள் இல்லை என்றும், அவர் refer செய்த மருத்துவமனைக்கு மருத்துவ



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:11:11 +0530

சிகிச்சைக்கு செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்று வழங்கவில்லை என்றும், தான் பதிவு செய்த விபத்து பதிவேடு அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை பிரிவு 351(ஆ)(1) BNSS ன் கீழ் விளக்கிக்கூறி கேள்வி கேட்க எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், எதிரிகள் தரப்பில் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. புகார்தாரர் தரப்பு வாதம் பின்வருமாறு**

முதல் எதிரி கணேசன் புகார்தாரரின் கணவர் என்றும், இரண்டாம் எதிரி வீரம்மாள் முதல் எதிரியின் இரண்டாம் மனைவி என்றும், மூன்றாம் எதிரி, சுப்பிரமணியன் ஐந்தாம் எதிரி ஆனந்தன் புகார்தாரரின் கொழுந்தனார் நான்காம் எதிரி யசோதை (எ) மீனா ஆறாம் எதிரி சுமதி ஆகியோர் புகார்தாரருக்கு ஒப்படியாள் ஏழாவது எதிரி நடராஜன் புகார்தாரருக்கு மாமனார் என்றும், புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் கடந்த கடந்த 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் புகார்தாரர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் தனியாக இருந்தபோது மேற்படி ஏழு எதிரிகளும் புகார்தாரர் வீட்டிற்குள் அத்துமீறி புகுந்து புகார்தாரரை குச்சிக்காரி, தேவடியா என ஒன்றாவது எதிரி கணேசன் திட்டி, கையால் வலது கன்னத்தில் அறைந்து வீரம்மாளும் சுமதியும் புகார்தாரரை பிடித்துக்கொள்ள ஆனந்தன் புகார்தாரர் கழுத்தை பிடித்து நெறித்தார் என்றும் சுப்பிரமணியன் கட்டையால் புகார்தாரர் முதுகில் அடித்தார் என்றும், அந்த அடி புகார்தாரரின் வலது தோள்பட்டையில் பட்டது என்றும் அதனால் வலது தோள்பட்டையில் உள்ள எலும்பு முறிந்து விட்டது என்றும் புகார்தாரரின் மாமனார் நடராஜன் புகார்தாரரை காலால் தள்ளி எட்டி உதைத்து வீட்டை விட்டு வெளியே போடி என வெளியே கொண்டு வந்து ரோட்டில் போட்டு அடித்தார் என்றும், அவருடன் சேர்ந்து கொண்டு வீரம்மாள் யசோதை (எ) மீனா சுமதி ஆகியோர் புகார்தாரரை கையால் வலது கன்னம், இடுப்பு ஆகிய பகுதிகளில் அடித்தார்கள் என்றும், புகார்தாரர் மேற்கண்ட நபர்களால் ஏதேனும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அஞ்சியிருந்தார் என்றும், மறு நாள் 21.05.2011 மதியம் சுமார் 1.30 மணியளவில் மேற்கண்ட நபர்கள் அடித்ததில் வலி தாங்க முடியாததால் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு பின்னர் மேற்படி காயதினால் ஏற்பட்ட வலியால் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை K.M.C மருத்துவமனைக்கு,சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு ஆகிய



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:11:24 +0530

மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டு மேற்படி மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்தபோது காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் எஸ். அசோகன் என்பவர் வந்து புகார் வாக்குமூலம் பெற்றார் மன்னார்குடி நகர காவல்நிலையக்குற்ற எண். 441/2011 –இல் இ.த.ச. பிரிவுகள் 147,448, 294(பி), 342, 323 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து முறையான விசாரணையில்லாமல் சங்கதிகளில் பிழையுடையது என இறுதியறிக்கை தாக்கல் செய்த விவரத்தை கோர்ட்டிலிருந்து நோட்டீஸ் வந்த பிறகு தெரிந்து கொண்டார் என்றும், பின்னர் புகார்தாரர் தரப்பில் மேற்படி எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 147,452, 342, 294(பி),498(A), 323 325 r/w 109 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழும் தண்டனை பெறவேண்டியவர்கள் என்று கூறி வாதிட்டார்.

**8. எதிரிகள் தரப்பு வாதம் பின்வருமாறு**

புகார்தாரரும் , 1ம் எதிரியும் கணவன் மனைவி என்றும் புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் வாழ்வியல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 1ம் எதிரி மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்திருந்தார் என்றும் புகார்தாருக்கும், 1வது எதிரிக்கும் இடையே நடந்த எம்.சி.எண். 21/2020 வழக்கின்படி புகார்தாரர் ஜீவனாம்ச தொகை பெற்றுக்கொண்டு விட்டார் என்றும், வழக்கு சம்பவம் நடைபெற்ற இடம் 1ம் எதிரி கணேசனுக்கு சொந்தமான இடம் என்றும், மேற்படி 1ம் எதிரிக்கு சொந்தமான வீட்டில் இருந்து காலி செய்ய மறுத்ததால், 1ம் எதிரி கணேசன் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No. 50/2010 வழக்கை 26.03.2010 அன்று தாக்கல் செய்து 15.04.2010 வரை வழக்கு நடைபெற்று வந்து 20.05.2011 ஆம் தேதி இரவு மேற்படி புகார்தாரரின் வழக்கை நடத்தும் வழக்கறிஞர் குமாஸ்தா என்பவர் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு சென்று அதன் அடிப்படையில் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 21.05.2011 ஆம் தேதி மதியம் 1.35 மணிக்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதியாகி மன்னார்குடி நகர காவல் நிலையத்தாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்குப்பிறகு 22.05.2021 ஆம் தேதியன்று இவ்வழக்கு பிழையானது என்று காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு எதிரிகளை பழி வாங்கவேண்டும் என்ற நோக்கத்தில் புகார்தாரரால் இந்த பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளதால் இந்த புகாரை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:11:36 +0530

**9. தீர்வு**

புகார்தாரர் தாக்கல் செய்துள்ள அசாஆ.1ன்படி குற்ற நிகழ்வு நாள் 20.05.2011 ஆம்தேதி 22.30 மணி. குற்ற நிகழ்விடம் மன்னார்குடி பட்டக்காரத்தெரு, லெட்சுமிபிரபா வீடு காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.05.2011 ஆம் தேதி 20.30 மணி .

**10.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள அசாஆ. 4 விபத்துப்பதிவேடு ஆவணத்தில் 21.05.2011 ஆம் தேதி 1.35 மணிக்கு மகேஸ் என்பவரால் அழைத்து வரப்பட்ட புகார்தாரர் லெட்சுமி பிரபாவை பரிசோதித்தபோது 20.05.2011 ஆமம் தேதி பட்டக்காரத் தெருவில் இரவு 10.30 மணிக்கு தெரிந்த 7 நபர்கள் கையாலும், கட்டையாலும் அடித்ததாக கூறினார். அவரை தான் உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனை செய்தபோது கழுத்திலும், முதுகிலும் வலி இருப்பதாக கூறினார். வலது காதில் வலி மற்றும் காது கேட்கவில்லை, தொண்டையில் வலியும் பேச கஷ்டமாக உள்ளதாகவும், வலது பாதத்தில் வலி இருப்பதாக கூறினார். மேற்கண்ட காயங்களுக்கு ENT மருத்துவருடைய கருத்துரைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு Refer செய்து அனுப்பி வைத்தேன்.

**11.** மேற்படி புகார்தாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மன்னார்குடி நகர காவல்நிலையத்தார் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை எண்.441/2011 ச/பி. 147,448,294(பி), 342,323 இதச மற்றும் 4 of TNPHW Act – ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட லெட்சுமி, தனம் காந்தி (எ) மகாலெட்சுமி, அருணா, மூவேந்தன், பெரியநாயகம், கென்னடி தருமன் ஆகிய சாட்சிகள் மேற்படி நாளில் மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்று போலீசார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள். மேற்படி வழக்கில் சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கக்கூடிய நபர்கள் என்பதும் தெரியவருகிறது.

**12**. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் "இந்த வழக்கில் கண்ட 1வது எதிரி கணேசன் என்பவர் எனது கணவர் என்றால் சரிதான். தற்பொழுது அவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்தவர் என்றால் சரிதான். எனக்கும் அவருக்கும் வாழ்வியல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். நான் அவர் மீது இதே நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்து எம்.சி.நம்பர் 21/2000 என்று நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் 06.10.2021 ஆம் தேதி 1, 62,000/– மொத்தமாக ஜீவனாம்சம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:01 +0530

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எனது கணவர் கணேசனுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கும் 1 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் 1 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு சம்பவம் நடந்தது சம்பந்தமாக நான் காவல்நிலையத்திற்கும் செல்லவில்லை, மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். நான் அன்று இரவு காவல்நிலையத்திற்கு போன் செய்தேன். அப்பொழுது காவல்நிலையத்தில் இரவுப்பணிக்கு ஆல் இல்லை என்றும், காலையில் காவலரையும் அனுப்புவதாக கூறினார்கள் 21.05.2011 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு எனக்கு வலி வந்ததாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தேன் என்றால் இரவு என்னை மிரட்டியதால் நான் உயிருக்கு பயந்து மருத்துவமனைக்கு செல்லவில்லை. மறுநாள் காலைதான் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவமனையில் அட்மிஷன் போடுவதற்கு காலதாமதமாக்கி விட்டார்கள். இரவு என்னை மிரட்டினார்கள், அதனால்தான் நான் காவல்நிலையத்திற்கு போகமுடியவில்லை என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்திலும், தனிநபர் முறையீட்டிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்பொழுது இந்த வழக்கிற்காக மேற்கண்ட சங்கதிகளை சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்தை மருத்துவர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். எனக்கு அடிப்பட்டதற்கான வீக்கக்காயங்கள் , ரத்தக்காயங்கள் இருந்ததா என்றால் இருந்தது . எனக்கு உடம்பில் எவ்விதமான காயங்களும் இல்லை என்றால் சரியல்ல. இந்த எதிரிகள் மீது ஒரு கிரிமினல் வழக்கை உருவாக்குவதற்காக எனது அதிகாரத்தை பயன்படுத்தி மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது எனக்கு எக்ஸ்ரே எடுத்தார்களா என்றால் இல்லை. போதிய உபகரணங்கள் இல்லை என்று தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். எனக்கு நுண்கதிர் படம் எடுக்கும் அளவிற்கு எவ்வித காயமும் இல்லை என்றால் சரியல்ல. என்னை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். நான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து அங்கு பரிந்துரைக்கப்பட்டு சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தேனா என்றால் இல்லை. நான் நேரடியாக



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:08 +0530

சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். என்னை நுண்கதிர் படம் எடுப்பதற்காக ராஜீவ்காந்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்களா என்றால் எனக்கு ஆப்பரேசன் செய்யவேண்டும் என்பதற்காக ராஜீவ்காந்தி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ராஜீவ்காந்தி மருத்துவமனையில் எனக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. ராஜீவ்காந்தி மருத்துவமனையில் எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்களைதான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மன்னார்குடி அரசு மருத்துவமனை, தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை , கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எனக்கு வெளிப்புறக்காயங்கள் இல்லை என்று மருத்துவ ஆவணங்கள் உள்ளது என்றால் வீக்கம் இருந்தது . ராஜீவ்காந்தி மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட நுண்கதிர் படம் எனது அதிகாரத்தை பயன்படுத்தி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று ஒரு வழக்கறிஞர் குமாஸ்தா வந்தார் என்றால் சரிதான். 20.05.2011 ஆம்தேதி சம்பவம் நடந்த அன்று மன்னார்குடி நகர காவல்நிலையத்திற்கு போன் செய்து சம்பவ இடத்திற்கு மன்னார்குடி நகர போலீசார் வந்தார்களா என்றால் இல்லை. அன்றே சம்பவ இடத்திற்கு மன்னார்குடி நகர போலீசார் வந்து கண்டித்து விட்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எனது கணவரின் சகோதரிகள் ,அவர்களது கணவர் ஆவார்கள் என்றால் அவரது இரண்டாவது மனைவியும் உள்ளார்.எனது கணவர் கணேசன் என்பவர் என்னிடமிருந்து பிரிந்து சென்று 2 வது மனைவி வீரம்மாள் என்பவருடன் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது புகாரில் எனது கணவரின் 2 வது மனைவி வீரம்மாள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனது போலீஸ் வாக்குமூலத்திலும் வீரம்மாள் 2 வது மனைவி என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனது கணவர் கணேசன் எனது கழுத்தை பிடித்து தூக்கும்போது 3 பவுன் செயின் அறுந்து விட்டதாக அதனை அவரே எடுத்து சென்று விட்டார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மற்ற எதிரிகள் அப்பொழுது என்னை இறுக்கிப்பிடித்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தஞ்சாவூர் புன்னை நல்லூர் மாரியம்மன் கோவில் , மார்ட்டின் நகரில் எனது கணவரால் 2400 சதுரடி இடம் வாங்கி எனது பெயரில் பதிவு செய்யப்பட்டு இன்றளவும் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. அதனை கணேசன் விற்பனை செய்து விட்டார். நெடுவாக்கோட்டை கிராமத்தில் மாரியம்மன்கோவில் அருகில் 1440 சதுரடி என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது நீதிமன்றத்தில் வழக்கில் உள்ளது. இன்றளவும் 2 கோடி பொறுமானம் உள்ள சொத்துக்கள் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. வீடு மட்டும்தான் உள்ளது. 1/3 பட்டக்காரதெருவில் உள்ள வீடு கணேசனுக்கு சொந்தமான பூர்வீக வீடு என்று சொன்னால் சரியல்ல. கணேசனால் சொந்த உழைப்பின் மூலமாக சம்பாதித்து கட்டப்பட்ட



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:16 +0530

வீடு என்றால் சரியல்ல. தற்சமயம் அந்த வீட்டில் கணேசனின் தாயார் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான்தான் வசித்து வருகிறேன். நான் தற்சயம் அந்த வீட்டில் குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் ஏற்கனவே மன்னார்குடி, காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தில் குற்ற எண். 441/2011 ன்படி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வழக்கு சம்பவம் உண்மை இல்லை என்று கூறப்பட்டு அந்த வழக்கு முடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 சேரமணி என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். கார்த்திக் என்பவர் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. அவர் வீடு இருந்தது. சேரமணி என்பவர் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். கார்த்திக் , சேரமணி என்பவர்கள் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், இந்த வழக்கிற்காக என்னால் சேர்க்கப்பட்ட நபர்கள் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் அன்றைய தினம் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கில் சொல்லப்பட்ட படி எதிரிகளால் எந்தவிதமான காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல . எனது கணவர் கணேசன் நான் கொடுத்த மன உளைச்சலால் அவர் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. அவர் உடல் நலைக்குறைவால் இறந்து விட்டார். கணேசனை தவிர்த்து மற்ற எதிரிகள் கணேசனின் சொத்தில் பாகம் கேட்டு விடுவார் என்ற பயத்தில் மற்ற எதிரிகளையும் இந்த வழக்கில் சேர்த்து தனி நபர் முறையீட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**13.** புகார்தாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாகவும் , புகார்தாரர் தனக்கு ஏற்பட்ட காயம் குறித்து தெளிவாக சாட்சியமளித்துள்ளதாகவும் மேலும் புகார்தாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு சேரமணி என்பவர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும் அவரது சாட்சியை முழுமையாக ஏற்றுக்கொண்டு எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று **வாதிட்டு பின்வரும்** ....

1) Dr. Sundar Vs. State of TamilNadu
2) Vadivelu Thevar Vs. State of Madras
3) R Shaj Vs. State of Kerala

என்ற முன் தீர்ப்புகளை எடுத்துக்கூறி வாதிட்டார்.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:28 +0530

**14.** புகார்தாரர் தரப்பு சாட்சி 2 சேரமணி அண்ணன் மகன் கார்த்தி என்பவருக்கு சம்பவ இடத்தின் அருகே வீடு இருப்பதாக அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள refer charge sheet-ல் குறிப்பு இல்லை. மேலும் புகார்தாரர் தரப்பு சாட்சி அசா.2 ஆக விசாரிக்கப்பட்ட சேரமணி லெட்சுமிபிரபா வீட்டிற்கு எதிரே எனது அண்ணன் மகன் வீடு உள்ளது என்று சாட்சியமளித்துள்ள நிலையில் அவரது அண்ணன் மகன் வீடு இருப்பதாக மாதிரிவரைபடத்தில் எவ்வித குறிப்பும் இல்லை என்பது ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும் மேற்படி சாட்சி இரவு 10.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வரவேண்டிய அவசியம் குறித்து சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15.** அசா 3 நஜிமாராணி 20.05.2011 ஆம் தேதி சுமார் 10.30 மணியளவில் பட்டக்காரத்தெருவில் தெரிந்த ஏழு நபர்கள் கையாலும், கட்டையாலும் அடித்ததாக கூறியதாகவும் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவருக்கு முதுகிலும், கழுத்திலும் வலி இருப்பதாக கூறினார் என்றும் 21.05.2011 ஆம் தேதி மன்னார்குடி தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காது, மூக்கு, தொண்டையில் வலி இருப்பதாக சொன்னதன் அடிப்படையில் காது, மூக்கு, தொண்டை நிபுணரின் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**16.** புகார்தாரருக்கு வலது தோள்பட்டையில் இருந்த வலிக்கு எக்ஸ்ரே எடுப்பதற்காகவும்,மேல் சிகிச்சைக்காகவும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரிமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. காது , மூக்கு , தொண்டை நிபுணரின் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவே தெரியவருகிறது. மேலும், சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் எடுக்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எக்ஸ்ரே படம் உரிய மருத்துவ அதிகாரி மூலம் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**17.**புகார்தாரர் லெட்சுமிபிரபா என்பவருக்கும் அவரது கணவரான 1ம் எதிரிக்கும் திருமண உறவு சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தநிலையில் 1ம் எதிரி கணேசன் , புகார்தாரர் லெட்சுமிபிரபாவிற்கு எதிராக விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ள நிலையில் கணேசனுக்கு சொந்தமான வீட்டில் புகார்தாரர் லெட்சுமி பிரபா வாழ்ந்து வந்ததும் ஆவணங்கள்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:37 +0530

மூலம் தெரியவருகிறது. மேற்படி சங்கதிகளை அசா1 லெட்சுமிபிரபாவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

**18.**அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள refer charge sheet ( குற்ற இறுதியறிக்கை)-ல் புகார்தாரர் நடக்காத ஒரு சம்பவத்திற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும், அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றதாக சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள எந்த சாட்சிகளும் சாட்சியமளிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை பொய்ப்பிக்கும் வகையில் புகார்தாரர் சம்பவத்தை கண்ணுற்றதாக கூறியுள்ள சாட்சிகள் செந்தில் தியாகராஜன், கார்த்தி ஆகிய தனிப்பட்ட நபர்கள் யாரும் புகார்தாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படாததும் புகார்தாரர் வழக்கை கேள்விக்குறியாக்குகிறது.

**19.** புகார்தாரர் தரப்பில் 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு தனது வீட்டில் எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி ,அத்து மீறி நுழைந்து புகார்தாரரை காமக்குரோத வார்த்தையால் திட்டி, புகார்தாரரை கையால் அடித்தும், கட்டையால் அடித்தும் காயம் ஏற்படுத்தியதாகவும், கொடுமைகள் செய்ததாகவும் பெண் என்று பாராமல் அடித்து அவமானப்படுத்தியதாகவும் புகார்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி புகார்தாரர் குறிப்பிட்டபடி சம்பவம் எதுவும் அன்றைய தேதியில் நடைபெறவில்லை என்று போலீசார் விசாரணையில் புகார்தாரர் வீட்டின் அருகே வசிக்கும் நபர்கள் சொல்லியுள்ள நிலையில் அதனை மறுத்து புகாரை நிரூபணம் செய்யவேண்டிய கடமை புகார்தாரருக்கு இருந்தும், புகார்தாரர் தனிப்பட்ட சாட்சிகள் மூலம் தனது வழக்கை நிரூபணம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

**20.** மேலும் 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு எதிரிகள் அத்து மீறி நுழைந்து தாக்கியதாக சொல்லியுள்ள சம்பவம் குறித்து அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்து போலீசார் வந்து சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை விசாரித்தபோது அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று தெரியவந்து புகார்தாரரை போலீசார் எச்சரித்து சென்ற நிலையில் பின்யோசனையிட்டு வழக்கறிஞர் குமாஸ்தா அறிவுறுத்தலின் பேரில் 21.05.2011 ஆம் தேதி 01.35 p.m மணிக்கு மன்னார்குடி அரசு தலைமை மாவட்ட மருத்துவமனையில் அனுமதியாகி புகார்வாக்குமூலம் கொடுத்துள்ளதும் அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு குற்ற இறுதியறிக்கை (Refer charge sheet ) தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:52 +0530

**21.** புகார்தாரர் தன்னுடைய புகாரை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்காத நிலையில் புகார்தாரருக்கும், அசா1 க்கும் இருந்த திருமண வாழ்வியல் பிரச்சனை காரணமாக 1 ம் எதிரிக்கு சொந்தமான வீட்டில் இருந்து புகார்தாரரை வெளியேற்றி விடுவார்கள் என்ற எண்ணத்தில் வழக்கறிஞர் குமாஸ்தா ஆலோசனையின் பெயரில் எதிரிகள் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படும் எதிரிகளின் வாதம் முற்றிலும் நிராகரிக்க தகுந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**22.** புகார்தாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் புகார்தாரரின் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் தனிப்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்பதாலும் புகார்தாரரின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ளபடி 20.05.2011 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு ஒரு குற்றச்சம்பவம் நிகழ்ந்ததாக என்று ஐயம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதுதான் நீதியின்பால் உகந்தது என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளுக்கு எதிராக புகார்தாரரால் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**23.**எனவே, மேலே விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் **2, 4,6** ஆகிய எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,452,323 , 498(A) IPC ன் கீழும், **3** வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147,452,325 , 498(A) IPC மற்றும் 4 of TNPHW Act ன் கீழும், **5,7** ஆகிய எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,452,323 498(A)IPC மற்றும் 4 of TNPHW ACT ன் கீழான குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு புகார்தாரர் தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**24.** இறுதியாக,இவ்வழக்கின் **2, 4,6** ஆகிய எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,452,323, 498(A) IPC ன் கீழும், **3** வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147,452,325, 498(A) IPC மற்றும் 4 of TNPHW Act ன் கீழும், **5,7** ஆகிய எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,452,323 498(A)IPC மற்றும் 4 of TNPHW ACT ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் மேற்படி எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:12:59 +0530

25. இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

26 எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:13:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மன்னார்குடி.

1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :

| சாட்சியின் வரிசை எண். | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| அசா.1 | லட்சுமிபிரபா | புகார்தாரர் |
| அசா.2 | சேரமணி | கண்ணுற்ற சாட்சி |
| அசா.3 | நஜீமா ராணி | மதுரை கிழக்கு வட்டார மருத்துவ அலுவலர் |

2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

| சான்றாவணங்களின் வரிசை எண். | நாள் | சான்றாவணம் குறிப்பு | சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 21.05.2011 | புகார் வாக்குமூலம் | அ.சா.1– மூலம் |
| அ.சா.ஆ. 2 | 21.05.2011 | முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் | அ.சா.1– மூலம் |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:13:28 +0530

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 3 | -- | சென்னை கீழ்ப்பாக்கம் மற்றும் ராஜாஜி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சீட்டுகள் மொத்தம் பக்கம் 8 வரிசை | அ.சா.1 -மூலம் |
| அ.சா.ஆ. 4 | -- | விபத்து பதிவேடு | அ.சா.3- மூலம் |

3. **அரசு தரப்பு சான்று பொருள் :** இல்லை

4.எதிரிகள் தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:
இல்லை .

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:13:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.1 ,
மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,திருவாரூர்.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.08 11:13:43 +0530